DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE
C.C.No.120/2015
PROSECUTION WITNESS L.W.2/P.W.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மீனா | கணவர் பெயர் | மாணிக்கம் |
| கிராமம் | மூலப்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 07.02.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, மூலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். டீக்கடையில் வேலை செய்து வருகிறேன்.

2) தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 12, 13 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் வீட்டிற்கு வெளியே வைத்து பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தேன். அப்போது எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கும் கவிதா என்பவர் துணி துவைத்துக் கொண்டிருந்தார். அந்த அழுக்குத் தண்ணீர் என் மேல் பட்டதால் துணியை பிழிந்து துவைக்க சொன்னேன். அதற்கு என்னை கண்டாரோவோலி என தகாத வார்த்தையால் திட்டினார். எனக்கும் கவிதாவிற்கும் வாய் தகராறு ஏற்படவே சத்தம்கேட்டு வீட்டிற்குள் இருந்த எனது கணவர் எங்களிடம் சத்தம் போட்டுக் கொள்ளாதீர்கள் என கூறிக் கொண்டிருக்கும்போது சேகர் கட்டையால் எனது கணவரின் இடது தோள்பட்டையில் அடித்துவிட்டார். இன்னொருவர் சூரிக் கத்தி கைபிடியால் எனது கணவரின் தலையில் அடித்துவிட்டார். கட்டையால் அடித்தது சேகரா சக்திவேலா என்பது எனக்கு சரியாகத் தெரியாது. பெயர் சரியாக ஞாபகம் இல்லை. கூண்டில் முதலாவதாக நிற்கும் 1 ம் எதிரி எனது கணவரை கட்டையால் அடித்தார் என சாட்சி கூறுகிறார். ஆஜர் எதிரிகளில் யார் எனது கணவரின் தலையில் கத்தியால் அடித்தார்கள் என்பது சரியாகத் தெரியவில்லை. நானும் எனது மகன்களும் எனது கணவரை சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். போலீசார் மருத்துவமனையில் இருந்தபோது என்னை விசாரித்தார்கள்.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.07 06:16:25 +0530

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) நான் கவிதாவிடம் தள்ளி துவைக்க சொன்னதற்கு கவிதா என்னை அடிக்க வந்தாரா என்றால் ஆமாம். கவிதா தம்பி சக்திவேலும், கணவர் சேகரும் எனது கணவரை கீழே தள்ளிவிட்டு மாறி மாறி அடித்தார்களா என்றால் அடித்தார்கள். சேகர் அங்கிருந்த புங்க மரக்கட்டையை எடுத்து எனது கணவரின் இடது தோள்பட்டையில் ஓங்கி அடித்தாரா என்றால் ஆமாம். சக்திவேல் சூரிக்கத்தியின் மரக் கைபிடியால் எனது கணவரின் தலையில் அடித்தாரா என்றால் ஆமாம். முதல் விசாரணையில் மேற்படி விவரங்களை கூறவில்லை என்றால் பதற்றமாக இருந்ததால் கூறமுடியவில்லை. முதல் விசாரணையில் ஏன் எதிரிகளை அடையாளம் தெரியவில்லை என கூறினேன் என்றால் 2 ம் எதிரியை சரியாக அடையாளம் தெரியவில்லை. மற்ற இருவரையும் தெரியும்.

**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சம்பவம் 15 வருடங்களுக்கு முன்பு நடந்ததா என்றால் 13 வருடத்திற்கு முன்பு நடந்தது. சம்பவத்திற்கு பின்பு எங்கள் வீட்டை அரசாங்கம் இடித்துவிட்டது என்றாலும் நாங்கள் வேறு இடத்திற்கு குடி பெயர்ந்து 13 வருடங்கள் ஆகிவிட்டது என்றாலும் சரிதான். கவிதா சம்பவ இடத்தின் அருகில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். 15 வருடங்களுக்கு முன்பு சக்திவேல், சேகர், கவிதா ஆகியோர் யார், யார் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். போலீசார் விசாரித்தபோதும் நான் இதைத் தான் கூறினேன். யார்யார் எங்கு அடித்தார்கள் என்று போலீசார் விசாரித்தபோதும் கூறவில்லை என்றால் பதற்றத்தில் இருந்ததால் கூறவில்லை. மருத்துவமனைக்கு எனது கணவருடன் ஒன்றாகத் தான் சென்றேன். மயக்கநிலையில் இருந்த எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மருத்துவமனையில் சேர்த்தபோது எனது

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.07 06:16:30 +0530

கணவர் பேசக்கூடிய நிலையில் இல்லை. எனது கணவர் மருத்துவமனையில் சேர்ந்ததிதிலிருந்து 1 3/4 நாள் மயக்க நிலையில் இருந்தார். பிறகு மயக்கம் தெளிந்து எங்கே இருக்கிறேன் எனக் கேட்டார், நான் மருத்துவமனையில் இருப்பதாகவும், சம்பவம் நடந்ததைப் பற்றியும் கூறினேன். நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கூறியதன்பேரில் உண்மைக்கு மாறாக மாற்றி மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1 ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.07 06:16:35 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE
C.C.No.120/2015
PROSECUTION WITNESS L.W.1/P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாணிக்கம் | தகப்பனார் பெயர் | ராமையா |
| கிராமம் | மூலப்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 07.02.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, மூலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். டீக்கடையில் வேலை செய்து வருகிறேன்.

2) தேதி, மாதம் ஞாபகமில்லை கடந்த 2014 ம் வருடம் ஒருநாள் மதியம் 2.30 மணியளவில் எனது மனைவி மீனா வீட்டிற்கு வெளியே உட்கார்ந்திருந்தபோது, பக்கத்து வீட்டில் குடியிருக்கும் கவிதா துணி துவைத்துக் கொண்டிருந்தார். கவிதா துணி துவைத்த போது அழுக்குத் தண்ணீர் எனது மனைவி மீது பட்டதால் கவிதாவை பார்த்து எனது மனைவி அழுக்குத் தண்ணீர் என் மீது படுகிறது, பார்த்துத் துவையுங்கள் என்று சொன்னார். அதற்கு கவிதா எனது மனைவியை பார்த்து கண்டாரோவோலி அப்படி தாண்டி துவைப்பேன் என கெட்ட வார்த்தையால் திட்டினார். அப்போது உள்ளே டிவி பார்த்துக் கொண்டிருந்த என்னிடம் எனது மனைவி வந்து என்னை கூப்பிட்டு விவரத்தைக் கூறவே நான் கவிதாவை இப்படியெல்லாம் செய்ய வேண்டாம் என கூறியபோது, கவிதாவின் கணவர் சக்திவேல் இடது தோள்பட்டையில் புங்கமரக் கட்டையால் அடித்துவிட்டார். சேகர் எனது தலையில் சூரிக்கத்தியின் கைபிடியை கொண்டு என்னை தலையில் அடித்துவிட்டார். பின்னர் எனது மகன்கள் சுரேஷ் மற்றும் ஆனந்த் ஈரோடு தலைமை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.02.07 06:16:49 +0530

சேர்த்தனர். ஒருவாரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். எனது தோள்பட்டை இறங்கிவிட்டதால் என்னால் சரியாக பளு எதையும் தூக்க முடியாது. தலையில் பட்ட அடியால் எனக்கு அடிக்கடி மயக்கம் வரும். நான் மருத்துவனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னை தகாத வார்த்தையால் திட்டி அடித்தவர்களை அடையாளம் காட்ட முடியுமா என்றால் எனக்கு கண் பார்வை சரியாக தெரியாது, அருகில் இருந்து பார்த்தால் தான் சொல்ல முடியும். **(எதிரிகள் மூவரும் சாட்சிக்கூண்டிற்கு அருகே நிற்க வைக்கப்பட்டு சாட்சியிடம் கேட்டபோது, 3 ம் எதிரியை பார்த்துவிட்டு அவர் யார் என்று தனக்கு சரியாக ஞாபகம் இல்லை என்றும் 1 ம் எதிரியை பார்த்து அவர் சக்திவேல் என்றும், 2 ம் எதிரியை பார்த்து அவர் சேகர் என்றும் அடையாளம் காட்டினார்)** என்னிடம் காண்பிக்கப்படும் கட்டை மற்றும் கத்தியால் தான் என்னை அடித்தார்கள். ( கட்டை மற்றும் கத்தி அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**2 ,3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 15 வருடங்களுக்கு முன்பு பார்த்த நபர்களை மீண்டும் இன்று தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் ஆமாம். எனக்கு கண் பார்வை சரியாகத் தெரியாது என்பதால் தூரத்தில் இருப்பவர்களை என்னால் பார்க்க முடியாது, பார்த்தால் சரியாகத் தெரியாது. அருகில் இருந்து பார்த்தாலும் நபர்களின் அங்க அடையாளங்களை என்னால் சரியாகச் சொல்ல முடியாது. யூகத்தின் அடிப்படையில் இது சக்திவேலாக இருக்கலாம், இது சேகராக இருக்கலாம் என கூறினேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக கூறப்படும் வீடு லைன் வீடு என்றால் சரிதான். நான் என் வீட்டிற்குள் டிவி பார்த்துக் கொண்டிருந்தபோது வெளியே சத்தம் கேட்டது. அதன் பின்னர் எனது மனைவி வீட்டிற்குள் வந்து என்னை அழைத்ததால் நான் வெளியே சென்றேன் என்றால் ஆமாம். டிவியை பார்த்துவிட்டு உடனே வெளியே வந்து பார்க்கும் போது கண் மசமசப்பாக இருந்ததா என்றால் இல்லை. அப்போது கண் பார்வை நன்றாக இருந்தது. வெளியே வந்து எவ்வளவு நேரம் சண்டை நடந்தது என்றால் 15 நிமிடம் நடந்தது. வாய்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.07 06:16:54 +0530

சண்டை 15 நிமிடம் நடந்தது. எனது வீட்டைச் சுற்றி நிறைய வீடுகள் உள்ளது. எனக்கு அடிபட்டவுடன் எனக்கு மயக்கமாகிவிட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தபோது மயக்கநிலையில் தான் இருந்தேன். மருத்துவரிடம் 4 நபர்கள் என்னை தாக்கியதாக கூறினேனா என்றால் இல்லை. 10 மணி நேரம் மயக்கமாக இருந்தேன். போலீசார் வந்து பார்த்தபோது நான் மயக்கநிலையில் இல்லை, தெளிவாகத் தான் இருந்தேன். போலீசார் வந்து என்னை பார்த்தபோது, சக்திவேல் தலையில் அடித்ததாக கூறினேன் என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் போலீசார் விசாரித்தபோதும் சக்திவேல் தோள் பட்டையில் அடித்ததாகத் தான் கூறினேன் என்றால் ஆமாம். புகாரிலும், போலீசார் விசாரித்தபோதும் சேகர் தான் தலையில் அடித்ததாகக் கூறினேன் என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் தான் உண்மையானது என்றால் ஆமாம். நான் கையெழுத்து செய்த தாளில் போலீசார் என்ன எழுதியிருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் எனக்கு படிப்பறிவு கிடையாது. போலீசார் என்ன எழுதினார்கள் என்பதை என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து காவல்நிலையம் சுமார் 4 கிமீ தொலைவில் உள்ளது. தகவல் தெரிந்து போலீசார் எனது வீட்டிற்கு வந்தார்களா என்றால் வந்தார்கள். மருத்துவமனையில் போலீசார் என்னை ஒரு முறை விசாரித்தார்கள். மருத்துவமனையில் போலீசார் என்னிடம் ஆயுதங்களை காண்பித்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனது மனைவி சாட்சி கையொப்பம் செய்தாரா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. அடிபட்ட இடத்திலும், எனது துணியிலும் இரத்தமாகிவிட்டது என்றால் ஆமாம். போலீசார் என்னை விசாரித்தபோது எனது துணியை வாங்கிக் கொண்டார்களா என்றால் இல்லை. நான் சொன்ன நாளில் யாரும் என்னை தாக்கவில்லை என்றாலும், அதனால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் புகார் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 கட்டையிலும், அ.சா.பொ.2 கத்தியிலும் இரத்தக் கறைகள் இல்லை என்றால் ஆமாம். போலீசார் என்னை விசாரித்தபோது என்னை தாக்கிய நபர்களின் உயரம், எடை, அடையாளங்கள் ஆகியவற்றை என்னிடம் கேட்கவில்லை, நானும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாக்கிய நபர்களையும், தாக்க

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.07 06:17:00 +0530

பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களையும் போலீசாரிடம் அடையாளம் காண்பித்தீர்களா என்றால் அடையாளம் காண்பித்தேன். தற்போது என்னிடம் 10, 20 நபர்களை எதிரிகளுடன் சேர்த்து நிறுத்தினால் என்னால் சரியாக அடையாளம் காட்ட முடியாது. சாட்சியம் சொல்ல வருவதற்கு முன்பாக போலீசார் என்னை பார்த்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நஅரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:டந்த பின்னர் நான் குடியிருந்த வீட்டை அரசாங்கம் இடித்துவிட்டது, நான் வேறு இடத்திற்கு குடிபுகுந்து 15 ஆண்டுகள் ஆகிவிட்டது. நான் அனுமானத்தின் பேரில் முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.பொ.1, அ.சா.பொ.2 ஆகியவற்றுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக அடையாளம் காண்பிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1 ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், பொய்யாக 1 ம் எதிரி மீது புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.02.07 06:17:06 +0530

Judicial Magistrate No.I,
Erode.